**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 32 /2021 PW1**

05.03.2025 **வா..சா.1 உண்ணாமலை சத்திய வாக்குமூலத்தின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

என்னுடைய குடும்ப சொத்தை செங்குட்டுவனுக்கு கிரைய ஒப்பந்தம் செய்து தான் எனது மகள் கமலாவிற்கு திருமணம் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்தத்தை 11 மாதத்திலேயே பணத்தை கொடுத்து ரத்து செய்து விட்டோம் என்றால் சரிதான். என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் எனது தாயார் அமிர்ததம்மாள் என்பவரை அசல் வழக்கு எண் 77/2019 வழக்கில் 1ம் பிரதிவாதியாக சேர்த்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கலசபாக்கம் நீதிமன்றத்தில் நான் கொடுத்த சாட்சியம் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு எண் 77/2019 வழக்கு சாட்சியத்தில் 1ம் பிரதிவாதியாகிய என் தாயாரை நான் தான் வழக்கறிஞரிடம் அழைத்து சென்று வக்காலத்து மற்றும் பதிலுரையில் கையொப்பம் வாங்கினேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 77/2019 வழக்கில் நான் வாதி, எனது தாயார் 1ம் பிரதிவாதி, பழனி 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். நான் வாதியாக உள்ள அசல் வழக்கு எண் 77/2019 வழக்கில் எனது தாயாரை 1ம் பிரதிவாதியாக சேர்த்து விட்டு நானே எனது தாயாருக்காக வழக்கறிஞரை நியமித்து பதிலுரையிலும் என் தாயாரின் கையொப்பத்தை பெற்றேன் என்றால் சரிதான். எனது தாயார் பழனிக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் இல்லை. எனது அம்மா பழனிக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார் என்றும், நான் என் தாயாரை அழைத்து சென்று அதை ரத்து செய்து விட்டேன் என்றால் சரிதான். தான செட்டில்மெண்டை ரத்து செய்த பிறகு தான் அசல் வழக்கு 77/2019 ல் 1ம் பிரதிவாதியாகிய என் தாயாருக்கும், பழனிக்கும், மற்றும் பலருக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 தான் மேற்படி அறிவிப்பு என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஐ கொடுத்த பிறகு தான் நான் அசல் வழக்கு 77/2019ஐ கலசபாக்கம் முன்சிப் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு 77/2019ல் எனது அம்மா மற்றும் பழனியை தவிர மேற்படி சட்ட அறிவிப்பில் கண்ட வேறு யாரையும் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு 77/2019 வழக்கு 21.12.2020ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு 77/ 2019ல் எனது குறுக்கு விசாரணையில் சண்முகம் என்பவருக்கு மனைபிரிவுகளாக பிரிக்கப்பட்ட இடத்தின் ஒரு பகுதியை விற்பனை செய்த கிரைய பத்திரத்தில் என் கணவர் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் என்றால் சரிதான் என்றும், மேற்படி ஆவணம் 28.12.2011ல் எழுதப்பட்ட கிரைய ஆவணம் என்றால் சரிதான் என்றும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 04.11.2004 தேதியில் அமிர்த்தம்மாள் பழனி என்பவருக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக்

கொடுத்த பிறகு அதனை எனது தாயார் 21.02.2011 தேதியில் ரத்து செய்து பிறகு மேற்படி தான செட்டில்மெண்ட்டில் கண்ட சொத்தை பல மனை பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அதில் ஒரு பகுதியை 28.12.2011 தேதியில் சண்முகம் கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தில் எனது கணவர் கோபால் சாட்சி கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். மேற்படி 21.02.2011 தேதியில் ரத்து செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் ரத்து செய்த பிறகு போடப்பட்ட மேற்படி கிரைய பத்திரத்தில் எனது கணவர் கோபால் சாட்சி கையொப்பம் போட்டதால் 04.11.2004 தான செட்டில்மெண்ட் பத்திரம் சட்டப்படி செல்லும் என்றால் சரியல்ல. மேற்சொன்னவாறு மனை பிரிவுகளாக பிரிக்கப்பட்ட நிலத்திற்கான கிரைய முன்பணம் பெற்றதை வைத்து தான் செங்குட்டுவனுக்கான கிரைய ஒப்பந்ததை ரத்து செய்தோம் என்றால் சரியல்ல. மேற்படி அசல் வழக்கு 77/2019ல் எனது குறுக்கு விசாரணையில் நான் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்ட 10 நபர்களும் என்னிடம் வந்து பணத்தை வாங்கிக்கொண்டு ஏன் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தீர்கள் என பிரச்சனை செய்த விவரம் சரிதான் என்று ஒப்புக்கொண்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேலும் அசல் வழக்கு 77/2019ல் என்னுடைய குறுக்கு விசாரணையில் அந்த வழக்கில் முன் அறிவிப்பு கொடுக்கும் போது எனது தாயார் என்னுடன் வசித்து வந்தார் என்றால் சரி என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரிக்கப்பட்ட மனைபிரிவுகள் அனைத்தும் விற்கப்பட்டது என்றால் சரிதான். நான், எனது கணவர், எனது பிள்ளைகள் அனைவரும் சொத்தை மனைகளாக பிரித்து விற்று விட்ட பிறகு இந்த வழக்கை பொய்யாக பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது பெயரில் உள்ள சர்வே எண் 89/1ல் உள்ள 10 செண்ட் நிலம் எனது தனிப்பட்ட சொத்து இல்லை என்பதால், அந்த சொத்தை இந்த வழக்கில் சேர்க்காதது குறைபாடு உடையது என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.